## தலைப்பு 261 – காலி மாவட்டச் செயலகம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

காலி மாவட்டச் செயலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் காலி மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2021 மே 19 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2021 மே 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினை தவிர்த்து, 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான காலி மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கை 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்டச் செலயகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளதாக.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

#### மூலதனச் செலவுகள்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான மூலதனச் செலவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றின்படி 03 நிலையான சொத்து விடயங்களின் முன்னைய ஆண்டின் இறுதி மீதி மற்றும் ஆண்டின் ஆரம்ப மீதி இடையே ரூபா 303.67 மில்லியனிற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | 2020 ஆண்டின் மீதிகளை முன்கொண்டுவரும் போது 2019 ஆண்டின் ஆரம்ப மீதிகள் 2020 ஆண்டின் ஆரம்ப மீதிகள் என பதியப்படுதல் இந்த வித்தியாசங்களுக்கான காரணமாக இருந்தது. | முன்னைய ஆண்டின் இறுதிக் கணக்கு மீதிகள் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிகள் என எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான திறைசேரி கணினி அச்சுப் பிரதி பரீட்சை மீதியின் படி மற்றும் நிதிக்கூற்றுக்கள் அடங்கியுள்ள நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றின் படி 03 விடயங்கள் தொடர்பாக ஆண்டின் போது தனதாக்கல்கள் மற்றும் கை தவிர்ப்புச் செய்தல்களில் முறையே ரூபா 308.15 மில்லியனிற்கான மற்றும் ரூபா 41,062 ற்கான வித்தியாசங்கள் காணப்பட்டன. | 2020 ஆண்டின் ஆரம்ப மீதிகளாக 2019 ஆண்டின் ஆரம்ப மீதிகளை பதிவு செய்தல் இந்த வித்தியாசங் களுக்கான காரணமாக இருந்தது. | அனைத்து சொத்துக்களும் தனதாக்கல் மற்றும் கை தவிர்ப்புச் செய்தல் என்பன நிதிக்கூற்றுக்களில் சரியாக உட்படுத்தி திறைச்சேரி கணினி அச்சுப் பிரதியுடன் இணக்கஞ் செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் போது நிதியல்லாத சொத்துக்களின் கூற்றுக்களின் படி மொத்தக் கொள்வனவு ரூபா 657.31 மில்லியன் தொகை எனினும் 03 செலவு விடயங்களை பிரதிநிதிப்படுத்தும் அக் கூட்டுத்தொகை ரூபா 354.44 மில்லியன் தொகையாக இருந்தமையால் அம்மீதிகள் இடையே ரூபா 302.87 தொகைக்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | கொள்வனவுகளில் உட்படுத்தப்பட வேண்டிய ரூபா 3,123,877 தொகை ஆரம்ப மீதியுடன் உட்படுத்துதலும் 2020 ஆண்டின் கொள்வனவுகளுடன் 2019 ஆண்டின் கொள்வனவுகளும் கூட்டப்பட்டிருந்தமையால் இவ் வித்தியாசம் ஏற்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ள கணக்கு மீதிகள் அட்டவணைகளில் கணக்கு மீதிகளுடன் ஒத்து இருக்க வேண்டும். |
| (ஈ) | 2019 ஆண்டின் போது ரூபா 3,255,303 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த கேபியன் தடுப்பு மதிலின் ஒரு பகுதி புரண்டு சேதமடைந்திருந்த போதிலும் அந்த சேதத்தினை பெறுமதி மதிப்பீடு செய்து உரிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | அறிக்கை தற்போது கிடைத்திருப்பதுடன் அதன் படி தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு செயற்படுவேன். | நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட்டு கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.6.2 முற்பணக் கணக்கு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 07 பிரதேச செயலகங்களின் கடன் படிவேடுகளில் கடன் மீதிகள் (CC 10) மற்றும் முற்பணக் கணக்கின் படி கடன் மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 1,732,296 தொகைக்கான இணக்கமின்மை காணப்பட்டது. | பத்தேகம மற்றும் பெந்தோட்டை பிரதேச செயலகங்களில் ஏற்பட்டிருந்த குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | குறிப்பிட்ட பதிவேடுகள் இணக்கஞ் செய்யக்கூடிய விதமாக கணக்குகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கட்டுநிதி மீதி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மோசடி ஒன்றின் காரணமாக கரந்தெனிய பிரதேச செயலகத்தில் 2006 ஆண்டு ஏற்பட்டிருந்த ரூபா 194,086 தொகைக்கான தீர்க்கப்படாத கட்டுநிதி மீதி 14 வருடங்களை விட மிகையான காலம் முதல் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும் அதனைத் தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தீர்க்கப்படாத கட்டுநிதி மீதியை விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் 07 மாதங்களுக்காக விண்ணப்பிக்கப்பட்ட கட்டுநிதி பெறுமதியை விட கூடுதலாக 39 மற்றும் 79 ற்கு இடைப்பட்ட சதவீதம் கட்டுநிதி குறைவாகவும் 05 மாதங்களுக்காக 108 மற்றும் 156 ற்கு இடைப்பட்ட சதவீதத்தில் கட்டுநிதி மிகையாகவும் கிடைத்திருந்தது. ஒட்டுமொத்தமாக மீளாய்வாண்டின் போது விண்ணப்பிக்கப்பட்ட மொத்த கட்டுநிதியை விட 88 சதவீதத்தினால் கட்டுநிதி குறைவாக கிடைத்திருந்தது. | சில சந்தர்ப்பங்களில் கடந்த மாதங்களின் கோரிக்கைகளையும் விண்ணப்பத்தையும் கவனத்தில் எடுத்து கட்டுநிதி வழங்கும் சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் அவ்வாறான சந்தர்ப்பங்களில் எம்மால் விண்ணப்பிக்கப்படும் கட்டுநிதியை மிகைத்து திறைசேரியில் இருந்து கட்டுநிதி கிடைப்பதுடன் அதன் காரணமாக மாதாந்தம் விண்ணப்பிக்கும் கட்டுநிதியை விட குறைவாக கட்டுநிதி கிடைக்கப்படும் மற்றும் மாதாந்தம் விண்ணப்பிக்கும் கட்டுநிதியை விட மிகையாக கட்டுநிதி கிடைப்பதால் பாரிய சதவீத வித்தியாசம் ஒன்று ஏற்பட்டிருந்தது. | திறைசேரியிலிருந்து கிடைக்கும் கட்டுநிதிகளையும் கவனத்தில் எடுத்து திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 2.2 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | இரண்டு வருமான குறியீடுகளின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த வருமானத்தில் இருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் 16 முதல் 64 சதவீதம் வரை குறைந்த சதவீதத்தை பெற்றிருந்தது. | 2020 ஆண்டில் காணப்பட்ட கொரோனா தொற்றுநோய் நிலைமை காரணமாக மதிப்பிடப்பட்ட வருமானத்தை விட சேகரிக்கப்பட்ட வருமானம் குறைவாக இருந்தது. | மதிப்பீட்டு வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 08 வருமான விடயங்கள் தொடர்பாக முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் வருமான சேகரிப்புக்களில் 9 முதல் 90 சதவீதம் வரை வருமானத்தில் குறைவொன்று ஏற்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

### 2.3 முற்பணங்கள் வழங்குதல் மற்றும் தீர்த்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 10 பிரதேச செயலகங்களில் 17 ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த கடன் மீதியின் கூட்டுத்தொகை ரூபா 758,762 தொகை காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 101,628 ற்கான கடன் மீதியொன்று 07 வருட காலம் முதல் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | 2021 ஏப்ரல் 30 திகதியிலுள்ளவாறு ரூபா 755,144 ற்கான கடன் மீதியொன்று அறவிடப்பட்டிருந்ததுடன், ரூபா 705,462 ற்கான கடன்மீதியொன்று மேலும் அறவிடப்பட வேண்டியிருந்து. | அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 02 பிரதேச செயலகங்களில் சேவை இடைநிறுத்தப்பட்டிருந்த உத்தியோகத்தர்கள் மூவரிடமிருந்து மேலும் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 108,248 தொகை 02 முதல் 04 வருடங்கள் வரையான காலம் முதல் அறவிடப்படாது காணப்பட்டது. | ரூபா 108,248 ற்கான கடன்மீதியொன்று மேலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | வேலை இடைநிறுத்தப்பட்டிருந்த உத்தியோத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள் தொடர்பாக பொறுத்தமான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நாகொட பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த கடன் மீதி ரூபா 136,665 தொகையாக இருந்ததுடன், அந்த கடன் மீதி 4 வருட காலம் முதல் அறவிடப்படாமல் காணப்பட்டது. | கடன் மீதி மற்றும் வட்டியை எதிர்காலத்தில் மாதாந்தம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | குறிப்பிட்ட உத்தியோத்தரிடம் அறவிடப்பட வேண்டிய கடன் மீதியை அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.4 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆண்டு தொடர்பான 2021 ஜனவரி மாதத்தில் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் மூலம் செலுத்தியிருந்த கூட்டுத்தொகை ரூபா 263,148 தொகைக்கான பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | அடுத்த வருடம் அனைத்து பொறுப்புக்களும் சிகாஸ் கணினி நிகழ்ச்சித் திட்டத்திற்கு உட்படுத்துவதற்கு நிதிக்கூற்றுக்களில் உட்படுத்த நடவடிக்கை எடுப்பேன். | பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் என இனங்காணக்கூடிய அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் அக்கூற்றில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இரண்டு பிரதேச செயலகங்களில் கட்டட நிர்மாண வேலை தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 1,805,459 தொகையான 2020 திசெம்பர் பில் பத்திரங்களுக்காக 2021 ஜனவரி மாதத்தில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமையால் ஏற்பாடுகளை மிகைத்து பொறுப்புக்களுக்கு உட்படல் ரூபா 1,783,485 தொகையாக இருந்தது. | கொடுப்பனவு செய்வதற்காக ஏற்பாடுகள் கிடைக்காமையால் பொறுப்புக்களுக்கு உட்படுத்தப்படவில்லை. | பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் என இனங்காணக்கூடிய அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் அக்கூற்றில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.5 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் ஏற்பாடுகளை பயன்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சமுர்த்தி, வதிவிடப் பொருளாதாரம், நுண்நிதி, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் மூலம் வதிவிடப் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கான தேசிய வீட்டுத் தோட்ட பயிர் செய்கை நிகழ்ச்சித் திட்டம் 2020/2021 இன் கீழ் கிடைத்திருந்த ஏற்பாடுகளில் ரூபா 2,201,203 தொகையினால் பயன்படுத்தியிருக்கவில்லை. | 2020 திசெம்பர் 08 திகதி ஏற்பாடுகள் கிடைத்திருந்தமையால் ஏற்பாடுகளை பயன்படுத்துவதற்காக காலம் போதியளவானதாக காணப்படாமை. | நேரகாலத்தோடு ஏற்பாடுகளை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.6 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38 பிரிவின் ஏற்பாடுகளின் படி கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படவேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணப்படுகின்றதென பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தவேண்டியிருந்துடன் அம் முறைமையின் ஆக்கபூர்வ தன்மை தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு | வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் மற்றும் அதன்படி கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு தயாரிக்கப்படுகின்ற உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், வருடாந்தம் நடாத்தப்படும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்ட அறிக்கைகளும் | 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

| | |
|---|---|
| மேற்கொள்ளப்பட்டு அதன்படி முறைமை பயன்தரு விதமாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதெனவும், அம் மீளாய்வுகள் எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளதென மேலும் அறிவிக்கின்றேன். |

## 2.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளது.

| அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் (i) நிதிப் பிரமாணம் 104 (4) | வாகனங்களுக்கு 2001 ஆண்டு ஒரு விபத்தும், 2018 ஆண்டு 3 விபத்துக்களும், 2020 ஆண்டு 3 விபத்துக்களும் ஏற்பட்டிருந்ததுடன் அந்த விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இறுதியறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாத விபத்துக்களுக்கான அறிக்கைகள் இவ்வாண்டில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ii) நிதிப் பிரமாணம் 1645(ஆ), 1646 (இ) | மாவட்ட செயலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாவட்ட சமூர்த்திப் பிரிவிற்கு சொந்தமான இரண்டு கப் வண்டிகள் தொடர்பாக நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் 2020 மே முதல் திசெம்பர் வரை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | கொரோனா தொற்றுநோய் நிலைமை மீது மாவட்ட சமூர்த்தி அலுவலகத்திற்கு சாட்டப்பட்டிருந்த கடமை மிகைத்திருத்தல் காரணமாக ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. | நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 இலக்கங் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கை | நிறுவனத்தின் அமைப்புக் கட்டமைப்பு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்போதிருக்கும் பதவியணி விபரங்கள், குறிப்பிட்ட ஆண்டிற்கான பாதீடு, வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்ட முக்கியத்துவ அடிப்படையில் தயாரிக்கப்பட்ட செயற்பாடுகள், பெறுகைத் திட்டம், உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் உள்ளடங்கக் கூடியவாறு தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று வருடம் ஆரம்பிப்பிக்கப்படுவதற்கு முன்னர் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அத்திட்டம் 2021 மார்ச் 08 திகதி தாமதமாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட திட்டம் தயாரிக்கப்பட்டு அமைச்சின் அறிவுரையின் படி 2020 பெப்ரவரி 12 திகதி சமர்ப்பிக்கப்பட்டது. | சுற்றறிக்கை அறிவுரையின் படி செயற்பட வேண்டும். |
| (இ) | (i) 2013 அக்தோபர் 07 திகதிய 21/2013 இலக்கங் கொண்ட பொது நிருவாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை | 06 பிரதேச செயலகங்கள் தொடர்பாக 06 உத்தியோகத்தர்களுக்காக மேற்கூறிய சுற்றறிக்கை அறிவுரையின் படி அங்கீகாரம் பெறாமல் 2020 ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களின் போது மாத்திரம் 22 நாட்களுக்காக விடுமுறை நாட் சம்பளம் பெற்றிருந்தார்கள். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி அரசாங்க விடுமுறை நாட்களில் கடமைகள் மேற்கொள்ளும் போது பூர்வாங்க அங்கீகாரம் மாவட்ட செயலாளரிடம் பெற்றுக்கொள்ளும் படி குறிப்பிட்ட பிரதேச செயலாளர்களை அறிவுறுத்த நடவடிக்கை எடுக்கின்றேன். | -மேற்படி- |
| | (ii) 2009 ஏப்ரல் 16 திகதிய 09/2009 இலக்கங் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 2(1) | சுற்றறிக்கை அறிவுரையின் படி நிறைவேற்று உத்தியோகத்தர்கள் விரல் அடையாளமிடும் இயந்திரத்தின் மூலம் மூலம் வருகை மற்றும் வெளிச்செல்லல் உறுதிப்படுத்தியிருக்கவில்லை. | வெளிக்கள கடமைகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் ஓட்ட அட்டவணைகளின் மூலம் வருகை மற்றும் வெளிச்செல்லல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 2.8 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

2017 ஆண்டின் போது வெள்ளத்தினால் அனர்தத்திற்குள்ளான ஆதனங்களுக்கான நட்டஈடு செலுத்துதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2017 ஆண்டு ஏற்பட்ட வெள்ள அனர்தத்திற்குள்ளாகிய ஆதனங்களுக்கான நட்டஈடு வழங்குவதற்காக பிரயோகிக்கும் விதத்தில் நீர்ப்பாசன, நீர் வளங்கல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் இரண்டு சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டிருந்தன. ஒரு சுற்றிக்கை 2018 மே திகதி குறிப்பிடாமல் வெளியிடப்பட்டிருந்ததுடன் அந்த சுற்றறிக்கைக்கு அமைவாக அனர்தமடைந்த ஆதனங்களுக்காக ரூபா 100,000 ற்கான உச்சமட்ட நட்டஈட்டுத் தொகை ஒன்று செலுத்தக் கூடியதாக இருந்தது. பிரதேச செயலகத்தினால் நட்டஈடு வழங்குவதற்காக பிரயோகித்திருந்த சுற்றறிக்கை 2017 ஜுன் 05 திகதி வெளியிப்பட்டிருந்ததுடன், அந்த சுற்றறிக்கைக்கு அமைவாக ரூபா 2.5 மில்லியன் உச்சமட்ட நட்டஈட்டுத் தொகை ஒன்று செலுத்தக்கூடியதாக இருந்தது. அதன்படி அச்சுற்றிக்கையை பயன்படுத்தி நாகொட பிரதேச செயலக பிரிவில் நட்டஈட்டுக் கொடுப்பனவு மேற்கொள்ளப் பட்டிருந்த காரணத்தினால் ரூபா 100,000 தொகையினை விட மிகையாக நட்டஈடு வழங்கியிருந்த வியாபாரிகளின் எண்ணிக்கை 122 தொகையாக காணப்பட்டதுடன், செலுத்தியிருந்த தொகை ரூபா 56.98 மில்லியன் தொகையாகும். இவ்வாறு ஒரே விடயம் தொடர்பாக இரண்டு சுற்றிக்கைள் வெளியிட்டிருத்தல் தொடர்பாக விளக்கமளிக்கப்பட வேண்டியிருந்தது. | 2017 மே மாதம் வெள்ள அனர்த்தத்தினால் சேதமடைந்த ஆதனங்கள் தொடர்பாக நட்டஈடு செலுத்துவதற்காக 261-1-1-0-2509 செலவுத் தலைப்பின் கீழ் எங்களுக்கு ஏற்பாடுகள் கிடைத்திருந்தது. அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வெளியிட்டிருந்த NDRSC/01/04/01/2017 மற்றும் 2017.06.05 திகதிய கடிதத்தின் மூலம் வழங்கியிருந்த அறிவுரையின் படி 261 செலவுத் தலைப்பின் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வெளியிட்டிருந்த DSG/SVC/12/39-2018 மற்றும் 2018.06.08 திகதிய அறிவுரைக் கடிதத்தின் மூலம் 2017 மே மாதம் அனர்த்த நிலைமையால் சேதமடைந்த ஆதனங்களுக்காக நட்டஈடு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | ஒரே விடயம் தொடர்பாக இரண்டு சுற்றறிக்கைகள் வெளியிடுதல் தொடர்பாக காரணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | வெவ்வேறாக இரண்டு வியாபார நிலையங்கள் நடாத்தி வந்ததாக ஏற்றுக்கொள்ளக்கூடிய எழுத்துமூல சான்றுகள் காணப்படாத போதிலும் ஒரே வியாபார நிலையம் நடாத்தியிருந்த கணவன் மனைவி இருவருக்கும் முறையே ரூபா 2,000,000 தொகை மற்றும் ரூபா 1,521,000 தொகையாக கூட்டுத்தொகை 3,521,000 தொகை நட்டஈடு செலுத்தப்பட்டிருந்தது. | அலுவலகத்தின் வர்த்தகப் பெயர் பதிவேட்டின் படி வர்த்தக நிலையப் பெயர் பதிவு செய்யப்பட்டிருக்காத போதிலும் நீண்ட காலமாக அப்பிரதேசத்தில் காணப்பட்ட இரண்டு வியாபார நிலையங்கள் என அவதானிக்கப்பட்டமையால் நட்டஈடு செலுத்தப்பட்டது. | நட்டஈடு செலுத்துவதற்கு முன்னர் உரிய உறுதிப்படுத்தல் சான்றுகளையும் பெற்றுக்கொண்டு அதன் படி செயற்பட வேண்டும். |
| (iii) | வெள்ளத்தினால் சேதமடைந்த ஆதனங்களுக்கான நட்டஈடு செலுத்துதலின் கீழ் மீள் குடியேற்ற செயற்திட்டம் ஒன்றிற்காக எல்பிட்டிய பிரதேச செயலகத்தினால் ரூபா 243,000 தொகை நட்டஈடு விண்ணப்பித்திருந்த நபர் ஒருவருக்கு ரூபா 1,266,587 தொகை மிகையாக நட்டஈடு செலுத்தப்பட்டிருந்தது. | பொதுமக்களுக்கு பெறுமதி மதிப்பீடு செய்தல் தொடர்பான புரிந்துணர்வு ஒன்று இல்லை என அறிவித்திருந்ததுடன், சேதத்தினை மீளளிப்பு செய்யும் அடிப்படை மேற்கொள்ளப்படுவது தே.இ.ச.சே.நி. 9(v) படிவத்தின் படி ஆகும் ஆதலால் மேலதிகக் கொடுப்பனவேதும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்கி இருந்த வழிகாட்டலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (iv) | 2018 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் படி வெள்ள நட்டஈடு செலுத்திய பின்னர் ரூபா 51.34 மில்லியன் தொகை ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. இந்த மீதித் தொகை தொடர்பாக ஒவ்வொரு விண்ணப்பத்தாரியும் விண்ணப்பித்திருந்த தொகை பரிந்துரைக்கப்பட்டிருந்த தொகை, விண்ணப்பதாரர் தொடர்பான விபரங்கள் மற்றும் நட்டஈடு செலுத்த முடியாமைக்கான காரணம் என்பன பிரதேச செயலக மட்டத்தில் சேகரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மேலதிக ஏற்பாடுக் கிடைக்கும் போது தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தில் இருந்து நட்டஈடு மீளளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததனால் திறைசேரியில் இருந்து கிடைத்திருந்த ஏற்பாடுகளில் ரூபா 51 மில்லியன் மீதியாக இருந்தது. | குறிப்பிட்ட தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 05 பிரதேச செயலாளர்களினால் ஒரு மாதத்திற்கு 20 நாட்களை மிகைத்து வெளிக்கள கடமைகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான படிகள் பெறப்பட்டிருந்ததனால், அந்த உத்தியோகத்தர்கள் சில மாதங்களில் அலுவலகக் கடமைகளை விட கூடுதலாக வெளிக் கடமைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கட்டாய கடமைகளுக்காக வெளிக்கள கடமைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது எனவும் 2 பிரதேச செயலகங்களினால் ஒரு மாதத்தில் வெளிக் கடமைகள் மேற்கொள்ளப்பட்ட தேறிய நாட்களின் எண்ணிக்கை 20 ஐ விட குறைவாகும். | அலுவலகக் கடமைகளுக்கு பாதகம் ஏற்படாத வகையில் வெளிக்கள கடமைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2.9 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மூன்று பொது வைப்புக் கணக்குகள் தொடர்பாக 2 ஆண்டுகளுக்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட மற்றும் 5 ஆண்டுகளுக்கு மிகையாக தீர்க்கப்பட்டிருக்காத கணக்கு மீதிகளின் பெறுமதி முறையே ரூபா 93.81 மில்லியன் தொகை மற்றும் ரூபா 199.37 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. இது தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 571(2) மற்றும் (3) பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | குறிப்பிட்ட மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பொது வைப்புக் கணக்கில் 5 வருடங்களை விட மிகையான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 169.8 மில்லியன் தொகை வீதிகளை காபட் இடும் 102 செயற்திட்டங்களின் தடுத்து வைத்தல் பணம் மீதிகள் காணப்பட்டதுடன் அச் செயற்திட்டங்களுக்கு உரிய குறிப்பிட்ட ஒப்பந்தகார நிறுவனங்கள் தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுத்து அந்த வேலைகளை பூரணப்படுத்தி தடுத்து வைத்தல் பணத்தை விடுவிப்பதற்கும் மற்றும் செயற்திட்டங்களின் நலன்களை பெற்றுக் கொள்வதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கும் படி தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளருக்கு அறிவிக்கப்பட்டது. | நீண்டகாலம் முதல் வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் காணப்பட்ட இந்த செயற்திட்டங்கள் தொடர்பாக விரைவாக தொடர்செயல் நடவடிக்கைகள் மேற்கொண்டு தடுத்து வைத்துள்ள பணத்தை விடுவிப்பதற்கு அல்லது பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட வேண்டும். |
| (இ) | மேற்கூறிய வைப்புக் கணக்குகளில் வேறொரு கணக்கு தொடர்பாக 5 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 230,214 தொகைக்கான 04 வைப்பு மீதிகள் தொடர்பாக மற்றும் 2 வருடங்களுக்கும் 5 இற்கும் இடைப்பட்ட ரூபா 23.94 மில்லியன் தொகைக்கான 44 வைப்பு மீதிகள் தொடர்பாக கணக்காய்வு ஐய வினாக்கள் அனுப்பப்பட்டிருந்ததுடன் அக் கணக்காய்வு ஐய வினாக்களில் காட்டப்பட்டிருந்த குறைபாடுகளை சரி | அந்த கணக்காய்வு ஐய வினாக்கள் தொடர்பான தற்போது தொடர் செயல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் தடுத்து வைத்தல் பணத்தை விரைவாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என அறிவிக்கின்றேன். | காலவதியான வைப்பு மீதிகள் தொடர்பாக விரைவாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், அது தொடர்பாக நிதிப் பிரமாணங்கள் மீதும் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

செய்து அந்த வைப்புக்களை விடுவிப்பதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆண்டின் போதும் 9 பிரதேச செயலகங்களினால் செயற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு கிரயம் ரூபா 103.28 மில்லியன் தொகைக்கான 200 செயற்திட்டங்கள் பல்வேறு காரணங்களினால் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. | செயற்திட்ட பிரேரணைகளில் அனேகமானவை அங்கீகரிக்கப்படுவது 2019 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஆக இருப்பதுடன் 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் காரணமாக தேர்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டிருந்த அறிவுரைகள் மீது மற்றும் நிதியமைச்சுச் செயலாளரினால் வழங்கியிருந்த அறிவுரைகளின் படி மற்றும் சீரற்ற காலநிலை, செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக சங்கங்கள் முன்வராண்மை, தேர்தல் அலுவல்கள் என்பன காரணமாக இருந்தது. | வினைத்திறனுடன் செயற்பட்டு அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் ஏற்பாடுகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நாகொட பிரதேச செயலக பிரிவில் காணப்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக துர்அதிஷ்டத்திற்கு உள்ளாகிய பொது மக்களை மீள்குடியேற்றும் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 200,000 வீதம் கூட்டுத்தொகை ஒரு மில்லியன் தொகை வழங்கியிருந்த நலன்பெறுவோர் 10 பேர் தமது வீடுகளின் நிர்மாண வேலை இடைநிறுத்தியிருந்தது. | எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு செயற்படுவேன் என அறிவிக்கின்றேன். | தேசிய அனர்த்த உதவி சேவை நிலையத்தினால் வழங்கியிருந்த அறிவுரைகளின் படி செயற்பட வேண்டும். |

## 3.2 செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தின் கீழ் காணப்பட்டும் 12 பிரதேச செயலகங்களின் மூலம் 2020 ஆண்டில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் 1812 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன், அச் செயற்திட்டங்களில் 494 செயற்திட்டங்களின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு 1 மாதம் முதல் 7 மாதம் வரையான கால தாமதம் ஏற்பட்டிருந்தது. மேலும் அச் செயற்திட்டங்களுக்காக ரூபா 472.1 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், தாமதமாகிய செயற்திட்டங்களின் சதவீதம் மொத்தச் செயற்திட்டங்களின் எண்ணிக்கை 27 சதவீதமாகக் காணப்பட்டது. அவ்வாறு தாமதம் ஆகிய செயற்திட்டங்களுக்காக தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பிரதேச செயலகத்தினை வினவி எதிர்காலத்தில் பதில் அளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். | தாமதம் ஆகிய செயற்திட்டங்களுக்காக உடன்படிக்கையின் படி தாமதக் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடையப் பெறாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆண்டிற்காக விவசாயிகளின் நம்பிக்கை பொறுப்பு நிதிய உதவியின் கீழ் 08 விவசாய செயற்திட்டங்களுக்காக ரூபா 3,899,885 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், விவசாய அமைச்சினால் ஏற்பாடுகள் ஒதுக்கப்படாமையால் அச் செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு முடியாமல் போயுள்ளது. | அந்த செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக அமைச்சில் இருந்து ஏற்பாடுகள் கிடைத்திருக்காமையால் செயற்படுத்துதல் நடைபெற்றிருக்கவில்லை. | குறிப்பிட்ட நிறுவனத்தில் இருந்து ஏற்பாடுகளை பெற்றுக்கொண்டு செயற்திட்டத்தை செயற்படுத்த வேண்டி இருந்தது. மேலும் செயற்திட்ட பிரேரணை தயாரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த கிரயத்திற்கு பொருளாதார பெறுமதி ஒன்று பெற்றுக் கொடுக்க வேண்டியிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பசுமை விவசாய உத்தியானம் ஒன்று நிறுவி அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக ரூபா 1,500,000 இற்கான பிரேரணை ஒன்று விவசாய அமைச்சிற்கு சமர்ப்பித்திருந்த போதிலும் 2020 ஆண்டின் போது ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | பசுமை விவசாய உத்தியானம் ஒன்று நிறுவி அபிவிருத்தி செய்வதற்கான செயற்திட்டம் விவசாய அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் ஏற்பாடுகள் ஒதுக்கப்படாமையால் அச் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு முடியாது போனது. | - மேற்படி - |
| (இ) | 2020 ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் 07 பிரதேச செயலகங்களின் 13 விவசாய அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக விவசாய அமைச்சில் இருந்து ரூபா 3,153,015 இற்கான ஏற்பாடுகள் விண்ணப்பிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய ஏற்பாடுகள் கிடைக்காமையால் செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு முடியாமல் போயுள்ளது. | இந்த செயற்திட்டங்களுக்கான ஏற்பாடுகள் கிடைக்காமையால் செயற்படுத்தப்படவில்லை. | - மேற்படி - |
| (ஈ) | பிரதேசத்தின் சேதன விவசாயத்தினை மேம்படுத்துவதற்காக சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்காக காணப்படும் ஆற்றல் வளம் மற்றும் சிக்கல்கள் அடங்கிய அறிக்கை ஒன்று பெற்றுத் தருமாறு விவசாய அமைச்சினால் அறிவித்திருந்ததுடன், பிரதேச செயலக மட்டத்தில் மாவட்டத்திற்கு பொருத்தமான செயற்திட்ட பிரேரணை ஒன்று ரூபா 12,192,470 இற்கான மதிப்பீட்டுப் பெறுமதி ஒன்றின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதற்காக 2020 ஆண்டில் ஏற்பாடுகள் ஒதுக்கப்படாமையால் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு முடியாமல் இருந்தது. | ஏற்பாடுகள் ஒதுக்கப்படாமையால் செயற்திட்டத்தை செயற்படுத்த முடியாமல் இருந்தது. | - மேற்படி - |
| (உ) | விவசாய அமைச்சுச் செயலாளரின் தலைமையில் நடைபெற்ற 2019 மே 29 திகதிய கூட்ட குழு அறிக்கையின் படி வன விலங்குகளினால் ஏற்படக் கூடிய சிக்கல்களை குறைப்பதற்காக எடுக்கக் கூடிய நடவடிக்கை என வாயு ரைபல் மூலமாக வன விலங்குகளை விரட்டுதல் உட்பட 6 விடயங்கள் கலந்துரையாடப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 திகதி | இக் கருமங்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் விவசாய அமைச்சு, கமநல அபிவிருத்தி திணைக்களம், வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், வன சீவராசிகள் அமைச்சு மற்றும் கால்நடை | பாதுகாப்பு அமைச்சு செயலாளரின் தீர்மானத்தை செயற்படுத்துவதற்காக கணக்கீட்டு உத்தியோகத்தர் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரை அவ் விடயங்கள் எதுவும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் மற்றும் நில அளவைத் திணைக்களம் என்பவற்றின் மூலம் நிறைவேற்றுவதற்காக முக்கியத்துவமாக செயற்பட வேண்டும். | |
| (ஊ) | விவசாயம்சார் பிரதேசங்களின் பயிர்செய்கைக்கு சேதம் விளைவிக்கும் வன விலங்குகளின் சேதங்களை குறைப்பதற்காக நிலைபேறான வேலைத்திட்டம் ஒன்று தயாரிப்பதற்காக விவசாய அமைச்சின் செயலாளரினால் அனைத்து மாவட்ட செயலாளரிடம் இருந்தும் தகவல்கள் அழைக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக விரிவான அறிக்கை ஒன்று அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அச் சிக்கல் தொடர்பாக நிலைபேறான வேலைத் திட்டம் ஒன்று இது வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த செயற்திட்டம் விவசாய அமைச்சின் மூலம் செயற்படுத்தப்படுவதுடன் இதன் பொறுப்பு அமைச்சு திணைக்களம் மற்றும் நிறுவனங்களுக்கு பொறுப்புச் சாட்டப்பட்டுள்ளதுடன் அதற்கான வெளிக்களம் சார் தகவல்கள் விவசாய அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | விவசாயிகளுக்காக நிலைபேறான தீர்மானங்கள் எடுக்கக் கூடிய மாவட்ட விவசாயக் குழு கூட்டங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்படாமல் அத் தீர்மானங்களை செயற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | கேட்போர் கூட நிர்மாண வேலை பரிசோதனை | | |
| | கேட்போர் கூடம் நிர்மாணிக்கும் செயற்திட்டம் 2019 ஜனவரி 30 திகதி ஆரம்பிக்கப்பட்டு 720 நாட்கள் அதாவது 2021 ஜனவரி 30 திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும் 2019 மற்றும் 2020 ஆண்டுகளின் போது கிடைத்திருந்த ஏற்பாடுகள் ரூபா 564.5 மில்லியன் தொகையில் ரூபா 501.54 மில்லியன் அதாவது 89 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. எனினும் 2021 ஏப்ரல் 15 திகதி வரையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகளின் பௌதீக முன்னேற்றம் 18.45 சதவீத மட்டத்தில் காணப்பட்டது. | புதிய திட்டம் தயாரிப்பதற்கு நேரிட்டமையால் செயற்திட்ட காலத்தை நீடிப்பதற்கு நேரிட்டிருந்ததென அறிவிக்கப்பட்டிருந்தது. 2019 மற்றும் 2020 ஆண்டுகளின் போது கிடைத்திருந்த ஏற்பாடுகள் ரூபா 564.5 தொகை மில்லியன் தொகையில் ரூபா 501.54 மில்லியன் தொகை செலவிடப்பட்டதெனவும் ரூபா 62.95 மில்லியன் கையில் உள்ள சிட்டைகள் தீர்க்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்ததுடன் அவ்வாறல்லாத சந்தர்ப்பங்களில் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 3.4 எதிர்பார்த்த நலன்கள் பெற்றுக்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) காலி கடவத்சதர பிரதேச செயலகம் | | |
| காலி கடவத்சதர பிரதேச செயலகத்தினால் பூர்த்தியான கிராமம் ஒன்று அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 1,000,000 தொகைக்காக மகுலுவ, 29 ஆம் இலக்க முதலாவது ஒழுங்கையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பக்க வடிகால், நீர் இறுதியாக வடிந்து செல்லும் கால்வாயுடன் இணையும் முறை தொடர்பான முறைமை சரியான மட்டத்தில் (Level) பூர்த்தி செய்யப்படாமையால் இந்த செயற்திட்டம் பாரிய சுகாதார சிக்களை ஏற்படுத்தும் பூர்த்தி செய்யப்படாத செயற்திட்டம் ஒன்றாக காணப்பட்டது. | இந்த சிக்கல் தொடர்பாக 2020.12.24 ஆந் திகதி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் கலந்துரையாடப்பட்டு இருந்ததுடன் நகர முதல்வரினால் செயற்திட்டத்தின் மீதியான பகுதியை பூர்த்தி செய்து ஏற்பட்டுள்ள சிக்கலை தீர்ப்பதாக உறுதி தெரிவித்தார். | முன்சாத்தியக் கூறு ஆய்வு முறைப் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டு சுகாதார சிக்கல்கள் ஏற்படாத முறையில் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) நாகொட பிரதேச செயலகம் | | |
| (i) பிரதேச செயலகத்தினால் செயற்படுத்தப்பட்டிருந்த 03 நீர் செயற்திட்டங்களுக்காக ரூபா 1,844,819 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவற்றின் நீர் குடிப்பதற்கு தகுந்த பௌதீக பண்புசார் தன்மை இன்றி காணப்பட்டதால் மூன்று செயற்திட்டங்களும் குழாய்கள் விரித்து வேலைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. | நீரின் பக்ரீரியாவை அகற்றுவதற்கு பொருத்தமான கிருமி நீக்கம் செய்யும் முறைமை ஒன்றை கடைபிடிப்பதன் மூலம் தீர்க்கக்கூடியதாக இருந்ததுடன் செயற்திட்டத்தின் மீதி அலுவல்களை பூர்த்தி செய்வதற்காக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நீரினை குடிப்பதற்கு பொருத்தமான நியம நிலைமைக்கு எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் நீர்க் குழாய்கள் பரப்பி செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்பட வேண்டும். |
| (ii) உக்ஓவிட வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் சுய தொழில் பயிற்சி நிலையத்திற்காக 2020 செப்தெம்பர் 01 திகதி வரை ரூபா 1,481,318 தொகை செலவிடப்பட்டு பாதி அளவில் வேலை பூர்த்தி | தற்போது வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் இந்த நிலையத்தில் பல்வேறு சுயதொழில்கள் மேற்கொள்வதற்கு உரிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | முறையான முன்சாத்தியக் கூறு ஆய்வு மேற்கொண்ட பின்னர் பொருளாதார நலன்கள் மிகையாக உள்ள செயற்திட்டங்களை தெரிவுசெய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியாகிய 2021 பெப்ரவரி 05 திகதி வரையும் கட்டிடம் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது. | | |
| (இ) | மண்சரிவு அதி அபாயம் காரணமாக அகற்றுவதற்காக பரிந்துரைக்கப்பட்ட நலன்பெறுவோரில் 04 பேருக்காக வீடுகள் நிர்மாணித்து கொள்வதற்காக கூட்டுத்தொகை ரூபா 4,708,605 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் 2021 ஏப்ரல் வரை மேற்கூறிய நலன் பெறுவோர் அபாயகரமான வீடுகளிலே வசித்து வந்தனர். | நலன்பெறுவோர்கள் அபாயத்திற்கு உள்ளாகும் இடங்களில் இருந்து அகற்று செல்வதாக மற்றும் வேறு எவரையும் இவ் இடத்தில் வதியவிடுவதில்லை என கூற்றொன்று பெற்றுக் கொண்டு பகுதிக் கொடுப்பனவு விடுவித்தல் மேற்கொள்ளப்பட்டதென அறிவிக்கின்றேன். | அனர்த்தம் ஏற்படக் கூடிய அதி அபாயகரமான இடங்களில் இருந்து குறிப்பிட்ட குடும்பங்களை அகற்றி புதிய வீடுகளில் வதிவதற்கான விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மீள்குடியேற்ற செயற்திட்டத்தின் கீழ் வீடுகள் நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த தொகை போதியளவாகக் காணப்படாமை தொடர்பாக மாவட்ட செயலாளருக்கு அறிவித்திருந்த போதிலும் அந்த சிக்கல்களுக்காக 2020 திசெம்பர் 31 திகதி வரை போதியளவு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடைபிடிக்க வேண்டிய நடவடிக்கை தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் மேலதிக செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | பிரதேச செயலாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விடயங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | 2020 நிதிக்கூற்றுக்களின் படி கோல் டீ கோல் மண்டபத்திற்காக 2020 ஆண்டின் செலவுகள் ரூபா 3,772,905 தொகை மற்றும் அதன் வருமானம் ரூபா 1,462,300 தொகையாக காணப்பட்டமையால் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 2,310,605 தொகையாக இருந்தது. | நாட்டில் கொவிட் 19 தொற்றுநோய் பரவிய காரணத்தால் கோல் டீ கோல் மண்டபத்தில் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துவதற்காக மண்டபத்தை ஒதுக்குவதற்கு பொது மக்கள் விண்ணப்பித்திருக் காமையால் அந்த இலக்கு வருமானத்தை உழைப்பதற்கு முடியாமல் போனது. | இலக்காகிய வருமான மட்டத்தை நெருங்குவதற்கு உத்தி முறைகள் கடைபிடிக்கப்பட வேண்டியதுடன் செலவுகளை குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நியாகம பிரதேச செயலகத்தினால் 2020 இறுதி காலாண்டில் கொள்வனவு செய்திருந்த ரூபா 43,500 தொகை பெறுமதியான 2 பண்ட விடயங்களுக்காக 2021 பெப்ரவரி 5 ஆந் திகதி அளவிலும் பெறுகைக் குழுவின் அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை. | மாவட்ட செயலாளரினால் எழுத்துமூல அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அக் கடிதம் கால தாமதத்தினால் அந்த அலுவலகத்திற்கு கணக்காய்வுத் திகதி வரை கிடைத்திருக்கவில்லை. | பெறுகை நடவடிக்கைகளில் தேவையானவாறு பூர்வாங்க அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. |

**3.6 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது பதிவழிக்கப்படாமல் முன்கொண்டு வரப்பட வேண்டிய சரியான மீதியின் கூட்டுத்தொகை ரூபா 2,847,291 தொகையாக காணப்பட்டதுடன், 19 வருடங்களாக காணப்பட்ட ரூபா 130,168 தொகை மீதி ஒன்றும் 7 வருடங்களாக காணப்பட்ட ரூபா 626,171 இற்கான மீதியொன்றும் உட்பட 9 நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக மாவட்ட செயலகம் பொருத்தமான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மோட்டார் வாகன விபத்துக்கள் தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாகொட பிரதேச செயலகத்தின் சொத்துக்களுக்கு ஏற்பட்டிருந்த நட்டங்கள் ஆகிய ரூபா 1,403,904 இற்கான தொகையினை ஏடுகளில் இருந்து பதிவழிப்பதற்கு உள்நாட்டு விவகார இராஜாங்க அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. இலக்கம் 12 ரேம்பாட் வீதியில் அமைந்துள்ள அரசாங்க உத்தியோகபூர்வ வாசஸ்தலம் ஒன்றிற்கு ஏற்பட்டிருந்த ரூபா 626,171 தொகைக்கான நட்டத்தை பதிவளித்தல் தொடர்பாக திறைசேரிப் பணிப்பாளர் நாயகத்தின் அறிவுரையை வேண்டியுள்ளேன். SPPB 4826 வாகனத்தின் விபத்து மற்றும் இலக்கம் SPPC 2079, SPPD 4258 வாகனத்தின் விபத்தை போலவே WPPA 3817 வாகனத்தின் விபத்தினால் ஏற்பட்ட நட்டத்தை நிதிப் பிரமாணம் 104(4) ஏற்பாடுகளின் படி எடுக்க வேண்டிய நடவடிக்கை இந்த ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். | நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக சரியான தகவல்கள் நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தி நிதிப் பிரமாணங்களின் படி பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆண்டின் போது 4 வாகன விபத்துக்கள் ஏற்பட்டிருந்ததுடன் அதற்காக கூட்டுத்தொகை ரூபா 394,250 தொகை திருத்த வேலைக்கான செலவு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அவ்விபத்துக்களில் 02 இற்கான கூட்டுத்தொகை ரூபா 243,300 | இலக்கம் SPPC 4549 இலக்கங் கொண்ட வாகனத்தின் நட்டம் 2020 ஆண்டு இறுதியளவில் தீர்க்கப்பட்டிருந்தது எனவும் SPPD 4258 இலக்க வாகன விபத்து, WPPA 3817 வாகன விபத்து தொடர்பாக 2021 ஆண்டின் போது நட்டத்தை | நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| தொகை சேத மீளளிப்பு பெற்றுக்கொள்வதற்கு 2021 ஏப்ரல் 30 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீளளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஸ்மார்ட் ஸ்ரீ லங்கா பிராந்திய அலகு நிறுவுவதற்காக கரந்தெனிய மற்றும் எல்பிடிய பிரதேச செயலகங்களுக்கு 04 கணினிகள் வழங்கப்பட்டு தொழில் எதிர்பார்போர்களை பதிவு செய்வதற்காக திட்டமிடப்பட்டு அது தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ்வலுவல்கள் இடைநிறுத்தப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றேன். | திட்டமிட்டுள்ளவாறு செயற்திட்டத்தின் தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | திறைசேரியின் ஒன்றித்த முகாமைத்துவ முறைமை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கரந்தெனிய பிரதேச செயலகத்திற்கு நிதியமைச்சிலிருந்து 2018 நவம்பர் 11 திகதி 06 கணினிகள் வழங்கியிருந்த போதிலும் 2021 ஏப்ரல் 30 திகதி வரையும் நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தாமையின் காரணமாக அக் கணினிகளுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவு சிக்கனமற்றதாக ஆகியுள்ளது. | திறைசேரி ஒன்றித்த முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம் விரைவாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | திறைசேரி செயலாளரின் அறிவுரைப்படி குறிப்பிட்ட செயற்திட்டம் வினைதிறனுடன் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.8 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | எல்பிடிய பிரதேச செயலகப் பிரிவில் காணிகள் இன்றிய பொது மக்களுக்கு காணிகள் வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் காணிகள் பகிர்ந்தளித்த காணிகளுக்காக குறிப்பிட்ட நலன் பெறுவோருக்கு வழங்குவதற்காக தயாரிக்கப்பட்டிருந்த 445 கொடைப் பத்திரம் வினியோகிப்பதற்கு முடியாமல் 38 வருட காலம் முதல் பிரதேச | கொடைப் பத்திரங்கள் பெறுவோர் முன்வராமை இந்த கொடை பத்திரங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் சிக்கலாக இருக்கின்றது. | பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு முடியுமான கொடைப் பத்திரங்கள் தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயலகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. அக் கொடைப் பத்திரம் ஜனாதிபதி அவர்களால் 1982 – 2009 இடைப்பட்ட காலத்தில் கையொப்பமிடப்பட்டிருந்ததுடன், 02 கொடைப் பத்திரங்கள் கையொப்பமிடப் பட்டிருக்கவில்லை. மேற்கூறிய கொடைப் பத்திரங்களிடையே 142 கொடைப் பத்திரங்கள் காணிப் பதிவாளர் அலுவலத்தில் பதிவு செய்யப்பட்டிருக்காததுடன், 303 கொடைப் பத்திரங்கள் பதிவு செய்தல் விடயங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | நியாகம பிரதேச செயலகத்தின் காணிப்பிரிவில் 1987 மற்றும் 1997 காலப் பகுதியுள் கொடைப பத்திரங்கள் பெறுவோருக்கு வினியோகிக்க முடியாமல் 384 கொடைப் பத்திரங்கள் அலுவலத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 26 கொடை பத்திரங்கள் முறையான மேற்பார்வையின்மை மற்றும் ஏனைய முகாமைத்துவ பலவீனங்கள் காரணமாக இரண்டு தடவைகள் தயாரிக்கப்பட்டிருந்தது. மேலும், 1987 முதல் 1997 வரையான காலப்பகுதிகளில் வழங்கப்பட்டிருந்த 14 கொடைப் பத்திரங்கள் 2021 பெப்ரவரி 05 திகதி வரை காணிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | குறுகிய காலத்தில் தீர்வு வழங்க முடியாத கொடை பத்திரங்கள் தொடர்பாக இவ்வருட இறுதிக்கு முன்னர் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் 09 அனுமதிப்பத்திரங்கள் நலன் பெறுவோருக்கு விரைவாக வழங்குவதற்கும் கொவிட் நிலைமை காரணமாக கருமங்கள் நிறைவேற்றப்படும் சதவீதம் குறைவடைந்திருந்தன என மேலும் அறிவிக்கின்றேன். | பகிர்ந்தளிக்கப்படாது இருந்த கொடை பத்திரங்கள் குறைபாடுகளை நிறைவு செய்து நலன்பெறுவோருக்கு வினியோகிப்பதற்காக நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்ததுடன், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட வேண்டிய கருமங்கள் திருப்திகரமாக சதவீதத்தில் நிறைவேற்றப்பட வேண்டும். |
| (இ) | 2015 திசெம்பர் 11 திகதிய 05/2015 இலக்கங் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் திருத்தப்பட்ட ஓய்வூதிய விபரங்கள் கிடைத்திருக்காமையால் நியாகம பிரதேச செயலகத்தினால் ஓய்வூதியம் செலுத்தப்படும் 12 உத்தியோகத்தர்களின் ஓய்வூதிய திருத்தம் மேற்கொள்வதற்கு 2021 ஏப்ரல் 30 வரை இயலாதிருந்தது. | குறிப்பிட்ட திருத்தத்தை மேற்கொள்வதற்காக ஓய்வூதிய திணைக்களத்திற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். | ஓய்வூதிய திணைக்களத்தில் இருந்து தேவையான அறிவுரைகளைப் பெற்று கோவைகளின் குறைபாடுகளை பூர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு சொந்தமான 28 தேக்க வாகனங்களுக்காக சாரதி சம்பளம் மற்றும் படிகள் தவிர பராமரிப்புச் செலவு ரூபா 14.47 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், ஓடப்பட்ட கிலோமீற்றர்களின் எண்ணிக்கை 678,097 தொகையாக காணப்பட்டது. அதன்படி கிலோமீற்றருக்கான சராசரி செலவு ரூபா 21 தொகை எனினும் ஒவ்வொரு வாகனத்தினதும் கிலோமீற்றருக்கான செலவு ரூபா 8 ற்கும் ரூபா 290 ற்கும் இடைப்பட்ட முரண்கள் காணப்பட்டன. | காட்டப்பட்டுள்ள தேக்க வாகனங்களின் கிலோமீற்றருக்கான செலவு ரூபா 21 ஐ விட அதிகரித்திருந்ததற்கான காரணம் முக்கிய திருத்த வேலைகளுக்காக பாரிய கிரயம் ஒன்று மேற்கொள்வதற்கு நேரிடுகின்றது என அவதானிக்கப்பட்டதுடன், அவ்வாகனங்கள் அனைத்தும் 10 வருடங்களை விட பழமை வாய்ந்தவை என | வாகனப் பராமரிப்புச் செலவினை குறைப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், ஓடப்படும் கிலோமீற்றர் செலவு பாரிய முரணுடன் காணப்படாதவாறு பராமரிப்புச் செலவுகளை முகாமைத்துவப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அவதானிக்கப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும், மேற்கூறிய வாகனங்களின் அனைத்து திருத்த வேலைகளும் மோட்டார் வாகன பரிசோதகரின் பரிந்துரையின் மீது மேற்கொள்ளப்பட்டடிருந்தது. | |
| (உ) | அனைத்து பிரதேச செயலகங்களின் மூலமும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு வருடமும் இலவசமாக சீருடைகள் வழங்கப்பட வேண்டியிருந்தது. தெரிவுப் பரிசோதனையின் போது நியாகம பிரதேச செயலகம் தொடர்பாக 2019 மற்றும் 2020 ஆண்டுகளின் போது முறையே 241 மற்றும் 243 அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு சீருடைகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கொள்வனவு செய்தல் தொடர்பாக பிரதேச செயலகத்திற்கு பொறுப்பு ஏதும் காணப்படாததுடன், பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் பதிவாளர் பிக்குவிற்கு சீருடை ஒப்படைக்கப்பட்டால் மாத்திரம் அந்த சீருடைகள் வழங்கல் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கின்றேன். | பௌத்த அலுவல்கள் திணைக்களம் தொடர்பாக பிரதேச செயலகத்திற்கு இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் பிரதேச செயலாளரின் மேற்பார்வையின் கீழ் காணப்படுவதால் அவதானிப்பில் காட்டப்பட்டுள்ள விடயம் தொடர்பாக பிரதேச செயலாளர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. |

**3.9 ஏனைய அவதானிப்புக்கள்**

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | Covid-19 தொற்றுநோய் காரணமாக உதவி நிதி வழங்கல் | | |
| | மாவட்ட செயலாளரின் கீழ் காணப்படும் மாவட்ட சமூர்த்தி பணிப்பாளர் அலுவலகம், பிரதேச செயலகங்கள் மற்றும் ஏனைய பிரிவுகளில் இருந்து Covid-19 தொற்றுநோய் காரணமாக வாழ்வாதாரத்தை இழத்தல் உட்பட பல்வேறு வகைப்படுத்தலின் கீழ் உதவி நிதி வழங்குதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டது. | | |
| (அ) | Covid-19 தொற்றுநோய் காரணமாக பண உதவி வழங்குவதற்காக 2020 மே மாத இறுதியளவில் காலி மாவட்ட செயலகத்தின் கீழ் காணப்படும் 19 பிரதேச செயலகங்கங்கள் மற்றும் அதன் கீழ் நிறுவப்பட்டுள்ள 68 | சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் இருந்து மீளளிப்பு செய்யப்பட வேண்டிய தொகை ரூபா 483,560,780 தொகையாக இருக்க வேண்டும். | சமூர்த்தி வங்கி அலுவல்கள் தடை இன்றி நடாத்திச் செல்வதற்காக சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் இருந்து அறவிடப்பட வேண்டிய |

| | | | |
|---|---|---|---|
| | சமூர்த்தி வங்களுக்கு சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் அனுப்பியிருந்த மொத்தத் தொகை ரூபா 2,382.65 மில்லியன் தொகையாக இருந்தது. அவற்றில் ரூபா 308.44 மில்லியன் தொகை திருப்பியனுப்பப்பட்டிருந்தது. அதன்படி கிடைத்திருந்த தேறிய தொகை ரூபா 2,074 மில்லியன் தொகையாக இருந்ததுடன், மொத்தக் கொடுப்பனவு ரூபா 2,557.77 மில்லியன் தொகையாக இருந்தமையால் சமூர்த்தி வங்கிச் சங்கங்களின் நிதியத்திலிருந்து ரூபா 483.56 மில்லியன் தொகை நலன் பெறுவோருக்கு செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி அத் தொகை சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் இருந்து மீளளிப்பு செய்யப்பட வேண்டியிருந்தது. | | ரூபா 483,560,780 தொகையினை விரைவாக மீளளிப்பு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பலப்பிடிய பிரதேச செயலகத்தின் 86-டீ ஆந்தாதொல கிராம உத்தியோகத்தர் வட்டாரத்தில் 17 நபர்களுக்காக ஒரு சுற்றில் ரூபா 5,000 வீதம் 02 அடிப்படையின் கீழ் கூட்டுத்தொகை ரூபா 170,000 செலுத்தப்பட்டிருந்தமையால் அந்த 17 நபர்களுக்கு மாத்திரம் ரூபா 85,000 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | நலன் பெறுவோரை இனங்காணும் போது ஊனமுற்ற மற்றும் முதியோர் செயலகங்களினால் வழங்கப்படும் நலன் பெறும் உரிமையை கவனத்தில் எடுக்காமல் செயற்பட வேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டுள்ளதெனவும் அதன்படி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் அறிவிக்கின்றேன். | Covid நலன்கள் கொடுப்பனவுகள் செய்யும் போது ஒரு அடிப்படையை தெரிவு செய்து அதற்காக மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | கடவத்சதர மற்றும் அக்மீமன பிரதேச செயலங்கள் தொடர்பாக covid 19 இன் கீழ் நலன்கள் பெற்றுக் கொள்ளாமை தொடர்பாக 2020 மே 01 திகதி முதல் 2020 மே 27 திகதி வரை கிடைத்திருந்த மேன்முறையீடுகளின் கூட்டுத்தொகை 41 தொகைக்காக கொடுப்பனவு மேற்கொள்வதற்கு குழுவின் பரிந்துரை கிடைத்திருந்ததுடன் 2021 ஏப்ரல் 30 திகதி வரை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவு செய்வதற்காக பரிந்துரை கிடைத்திருந்த போதிலும் ஏற்பாடுகள் மற்றும் பணம் கிடைத்திருக்காமையால் இது வரை கொடுப்பனவு செய்யப்படவில்லை. | தகைமை உடைய நலன் பெறுவோருக்கு உரிய காலத்தில் குறிப்பிட்ட covid நலன்கள் செலுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | (i) காலி கடவத்சதர பிரதேச செயலகங்களைச் சேர்ந்த தலாபிடிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் covid 19 நலன்கள் கொடுப்பனவு செய்யும் போது ஏப்ரல் மற்றும் மே மாதங்களின் போது இரட்டை அடிப்படை ஒன்றின் மீது 25 நபர்களுக்கு | 2019 ஆண்டின் வாக்குரிமை பெயர் பதிவேட்டில் மேற்குறிப்பிட்ட 35 பேரில் 10 பேர்கள் உட்படுத்தப்பட்டிருந்ததுடன் அது தொடர்பான விபரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை இலக்கம் 01 இன் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றது என | Covid நலன்கள் செலுத்தல் ஒரு அடிப்படையை தெரிவு செய்து அதற்காக மாத்திரம் மேற்கொள்ளப் படவேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நலன் கொடுப்பனவு செய்திருந்தமையால் கூட்டுத்தொகை ரூபா 250,000 தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | குறிப்பிடப்பட்டிருந்தது. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய 25 பேரும் 2019 வாக்குரிமை பதிவேட்டில் குறிப்பிடப்படாது இருந்த போதிலும், இவ் வட்டாரத்தில் நிரந்தர வதிவோர்கள் என அறிவிக்கின்றேன். | |
| | (ii) முதியோர் காத்திருக்கும் பதிவேட்டின் கீழ் ஏப்ரல் மாதம் பணம் கொடுப்பனவு பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள 21 நபர்களின் மற்றும் மே மாதத்தின் 162 நபர்களின் முதியோர் அடையாள அட்டை இலக்கங்கள் குறிப்பிடப்படாமல் ரூபா 915,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பதில் அனுப்பப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள நலன் பெறுவோரை தெரிவு செய்து நலன்கள் செலுத்தப்பட வேண்டும். |
| (உ) | 4 பிரதேச செயலகங்களை சேர்ந்த 358 ஓய்வூதியம் பெறுவோரின் உயிர்வாழ்வுதல் சான்றிதழ் பெற்றுக்கொள்ளாமல் 2020 ஆண்டிற்காக ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருந்தது. 04 பிரதேச செயலகங்களை சேர்ந்த ஓய்வூதியம் பெறுவோர் நான்கு பேருக்கு 2019 ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த உயிர்வாழ்தல் சான்றிதழை அடிப்படையாகக் கொண்டு 2020 ஆம் ஆண்டிற்காக ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருந்தது. | இது தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு செயற்படுகின்றன. | அனைத்து ஓய்வூதியம் பெறுவோர் தொடர்பாகவும் உயிர்வாழ்தல் சான்றிதழ் பெற்று கோவையில் உட்படுத்தப்பட வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 186 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் மாவட்ட செயலகத்தினால் அவ் வெற்றிடங்களை முறைப்பிரகாரம் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இவ் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள் ஏற்படல் எமது அலுவலக கட்டுப்பாட்டிற்கு புறம்பாக ஏற்பட்டிருப்பதனால் வெற்றிடங்களை நிரப்புவதற்காகவும் மிகைகளை சமப்படுத்துவதற்காகவும் எடுக்கக் கூடிய அனைத்து நடவடிக்கைகளும் எடுப்பட்டுள்ளன. | அத்தியவசிய பதவிகளுக்காக நிரந்தர உத்தியோகத்தர்களை நியமனம் செய்து வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | முறையான அங்கீகாரம் இன்றி அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை மிகைத்து 14 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். | எம்மால் இந்த உத்தியோகத்தர்கள் எவரதும் மிகைகள் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காத போதிலும் அவ் உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மேன் முறையீடுகளின் படி நியமன அதிகாரியினால் இந்த உத்தியோகத்தர்கள் காலி மாவட்டத்தில் உள்ள அலுவலகங்களுக்கு இணைக்கப்பட்டிருந்தது. | பதவிகளுக்கு ஆட்சேர்க்கும் போது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை மிகைக்காதவாறு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | உத்தியோகத்தர் ஒருவரின் நிரந்தர கடமைக்கு புறம்பாக ஏனைய கருமங்களுக்காக விடுவிக்கும் போது உரிய அமைச்சுச் செயலாளரின் பூர்வாங்க அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் நாகொட பிரதேச செயலகத்திற்கு இணைக்கப்பட்டிருந்த சமூர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் தென் மாகாண அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன், அதற்காக அங்கீகாரம் 2020 ஜூலை 01 திகதி பெறப்பட்டமையால் சுமார் 6 மாதங்கள் அங்கீகாரம் இன்றி உத்தியோகத்தர் கடமையில் ஈடுபட்டிருந்துள்ளார். | கணக்காய்வு அவதானிப்புக்கு இணங்குகின்றேன். | தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |
| (ஈ) | மேற்கூறிய (இ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர் திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் திவிநெகும அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியின் நியமனக் கடிதத்தில் காணப்பட்ட நிபந்தனைகளுக்கு கவனம் செலுத்தாமல் உத்தியோகத்தரின் நிரந்தர பதவியின் கடமைகளுக்குரிய சம்பளத்திற்கு மிகையாக தென்மாகாண அபிவிருத்தி அதிகார சபையின் மாதாந்த தலைவர் கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவுடன் தொலைபேசி கொடுப்பனவு ஒன்றும் ஆக அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட நாள் முதல் 2020 ஜூன் மாதம் வரை முறைசாரா விதமாக சம்பளம் மற்றும் படிகள் என கூட்டுத்தொகை ரூபா 654,729 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நியமனக் கடிதத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |